

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.1.2025) சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தொல்லியல் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், கீழடி இணையதளத்தினை தொடங்கி வைத்தார். இந்த விழாவில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் தொல்லியல் துறை ஆணையர் த. உதயச்சந்திரன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை முதன்மைச் செயலாளர் பி.சந்தர மோகன், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் திலீப் குமார் சக்ரவர்த்தி, இந்திய தொல்லியல் துறை மேனாள் தலைமை இயக்குநர் முனைவர் ராகேஷ் திவாரி, தொல்லியல் துறை கல்வியியல் மற்றும் ஆய்வு ஆலோசகர் பேராசிரியர் கா.ராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.1.2025) சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தொல்லியல் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், 5914 சதுர மீட்டர் பரப்பளவில் 17.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள கீழடி திறந்தவெளி அருங்காட்சியகம் மற்றும் 2325 சதுர மீட்டர் பரப்பளவில் 22.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள கங்கைகொண்ட சோழபுரம் அருங்காட்சியகம் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டினார். இந்த விழாவில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் தொல்லியல் துறை ஆணையர் த.உதயச்சந்திரன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை முதன்மைச் செயலாளர் பி.சந்தரமோகன், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் திலீப் குமார் சக்ரவர்த்தி, இந்திய தொல்லியல் துறை மேனாள் தலைமை இயக்குநர் முனைவர் ராகேஷ் திவாரி, தொல்லியல் துறை கல்வியியல் மற்றும் ஆய்வு ஆலோசகர் பேராசிரியர் கா.ராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பா.ஜ.க. அரசிற்கான பாதிப்பை மடைமாற்றம் செய்வதற்காக

# டெல்லி போட்ட உத்தரவை அப்படியே செய்கிறார் எடப்பாடி பழனிசாமி!

## அமைச்சர் ஐ.பெரியசாமி குற்றச்சாட்டு!



திண்டுக்கல், ஜன.24 -

ஒன்றிய பா.ஜ.க அரசிற்கு ஒரு பாதிப்பென்றால் ஓடிவந்து குறுக்கே விழுந்து அதை மடைமாற்றம் செய்வதே எதிர்கட்சித் தலைவர் பழனிச்சாமியின் தலையாய கடமை என்று மீண்டும் ஒருமுறை எடப்பாடி பழனிச்சாமி நிரூ பித்துள்ளார் என்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் 100 நாள் வேலை திட்டம் என்ற மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்காக ஒதுக்க வேண்டிய நிதியை ஒதுக்காமல் ஏழை எளிய மக்களின் வயிற்றில் அடித்து வருகிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. தமிழ்நாடு மட்டுமல்லாது இந்தியாவின் 10 மாநிலங்களில் 100 நாள் வேலை திட்ட பணியாளர்கள் இதனால் சம்பளம் பெற முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டுக்கு மட்டும் 04.12.2024 முதல் இன்று வரை நிதி வழங்கப்படவில்லை. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் முதலிடம் வகிக்கிறது என்பதை தாங்கிக் கொள்ள முடியாமல் ஒன்றிய அரசு வேண்டுமென்றே திட்டமிட்டு நிதி விடுவிக்காமல் இருந்து வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய பா.ஜ.க. அரசின் இந்த நயவஞ்சக செயலை கண்டித்து உடனடியாக தமிழ்நாட்டிற்கு ஒதுக்க வேண்டிய MGNREGS திட்ட தொழிலாளருக்கு வழங்கப்பட வேண்டிய ரூ:1056 கோடி நிதியை விடுவிக்க வேண்டும் என பொங்கலுக்கு முன்பே 13.01.2025 அன்று பிரதமருக்கு கடிதம் எழுதி ஒன்றிய பா.ஜ.க. அரசை வலியுறுத்தி இருந்தார். முதலமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து கடிதம் எழுதிய போது எதிர்க்கட்சி தலைவராக இருக்கும் பழனிச்சாமி என்ன மிக்சர் சாப்பிட்டுக் கொண்டிருந்தாரா? ரைடு பயத்தால் பங்கருக்குள் பதுங்கி இருந்தாரா?

தமிழ்நாட்டுக்கு ஆதரவாக குரல் எழுப்பியிருக்க வேண்டுமல்லவா? ஏதற்கெடுத்தாலும் செய்தித்தாளிலே படித்தேன், டி.வி.யை பார்த்து தெரிந்து கொண்டேன் என கூறும் பழனிச்சாமிக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழகத்திற்கு நிதி ஒதுக்காதது பற்றி தெரியாதா?

புயல் வெள்ள நிவாரணம், கல்வி நிதி, 100 நாள் வேலைக்கான நிதி ஆகியவற்றை ஒதுக்காமல் தமிழ்நாட்டு மக்களை வாட்டி வதைத்துவரும் பா.ஜ.க. அரசோடு கள்ளக்கூட்டணி வைத்துக் கொண்டு அன்று முதல் இன்று வரை தமிழ்நாட்டு மக்களுக்கு துரோகம் செய்வதை மட்டுமே வாடிக்கையாய் வைத்துள்ளார் பழனிச்சாமி. இதுவரை ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து ஒரு வார்த்தையாவது பேசி இருப்பாரா பழனிச்சாமி? அதற்கு அவருக்கு தைரியமிருக்கிறதா?

நிதியை ஒதுக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசு மீது தமிழ்நாட்டு மக்கள் கோபமாக இருப்பதை மடைமாற்ற டெல்லி போட்ட உத்தரவுப்படி தமிழ்நாடு அரசு மீது குறை சொல்லி அறிக்கை வெளியிட்டுள்ளார் அவர்களுக்கு வாய்த்த அடிமை பழனிச்சாமி.

உண்மையாக தமிழ்நாட்டு வளர்ச்சியிலும் மக்களின் நலனிலும் அக்கறை கொண்ட எதிர்கட்சி தலைவராக இருந்திருந்தால், தொடர்ந்து தமிழ்நாட்டிற்கான நிதி ஒதுக்குவதில் பாரபட்சம் காட்டிவரும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராய் போராட்டத்தை நடத்தி இருக்கவேண்டும்.

பா.ஜ.க.வோடு கள்ள கூட்டணி வைத்துக் கொண்டு தமிழ்நாட்டு மக்களின் முதுகில் குத்திக் கொண்டு இருக்கும் பழனிச்சாமியால், ஒரு நாளும் பா.ஜ.க. அரசிற்கு எதிராய் ஒருவார்த்தை கூட பேச முடியாது. அந்த கையாலாத தனத்தை மறைக்க தமிழ்நாட்டு மக்களின் நலனில் அக்கறை கொண்டு செயல்பட்டு வரும் திராவிட மாடல் ஆட்சி மீது வீண் அவதூறு பரப்புவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளார்.

இவ்வாறு அமைச்சர் ஐ.பெரியசாமி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



மதுரையில் நடைபெற்ற தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்க நூறாவது ஆண்டு விழாவை முன்னிட்டு தமிழக முதல்வர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் வர்த்தக சங்கத் தலைவர் டாக்டர் என். ஜெகதீசன் முதல்வருக்கு செங்கோல் பரிசு வழங்கினார் . உடன் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் பி .மூர்த்தி, தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பி.டி. ஆர். பழனிவேல் தியாகராஜன், மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் ஏ.எம். விக்கிரம ராஜா. வர்த்தக சங்க செயலாளர் எஸ்.ஸ்ரீதர் ஆகியோர் உள்ளனர்.

### இரும்பின் பயன்பாடு குறித்து வரலாற்று சிறப்புமிக்க ஆய்வு முடிவுகளை வெளியிட்டு

# உலகிற்கு உணர்த்திய முதலமைச்சருக்கு ஆயிரம் நன்றிகள்!

## சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வலைதளப் பதிவு!



சென்னை, ஜன. 24 -

சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதியின் நேற்றைய சமூக வலைதளப் பதிவு வருமாறு:

5300 ஆண்டுகளுக்கு முன்பே இரும்பின் பயன்பாடு தமிழ்நிலத்தில் அறிமுகம் ஆகிவிட்டது என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க ஆய்வு முடிவுகளை இன்று முதலமைச்சர் அவர்கள் உறுதி செய்துள்ளார்.

தமிழர் நாகரிகத்தையும், பண்பாட்டு வரலாற்றையும் மறைக்க துடித்து பொய் வரலாறு புனைந்து வந்தோரின் பொய்களை எல்லாம் அறிவியல் ஆய்வு மூலம் சுக்கு நூறாக்கி விட்டார் நமது முதலமைச்சர் அவர்கள்.

இந்திய வரலாறு தெற்கில் தமிழ் நிலத்தில் இருந்தே இனி எழுதப்படும் அதை உலகிற்கு உணர்த்திய முதலமைச்சர் அவர்களுக்கு ஆயிரம் நன்றிகள்.

இவ்வாறு அமைச்சர் ரகுபதி தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

### முரசொலி துணை ஆசிரியர்

# காஞ்சி கருணா (எ) கே.கருணாநிதி இல்ல மணவிழா!

## திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு நடத்திவைக்கிறார்!

சென்னை, ஜன. 24 -

முரசொலி துணை ஆசிரியர் காஞ்சி கருணா என்கிற கே.கருணாநிதி - கே. ரமாவதி ஆகியோரின் புதல்வர் கே.திவாகர்க்கும், ஆர்.வின்சென்ட் - வி.எலிசபத் ராணி ஆகியோரின் புதல்வி இ.வி.கிறிஸ்டினாவுக்கும் மணவிழா இன்று (24.1.2025 - வெள்ளிக்கிழமை) காலை 9 மணி அளவில், சென்னை அசோக் நகர் ஜவஹர்லால் நேரு சாலை (நூறடி சாலை) யில் அமைந்துள்ள எம்.பி.கே.மகாலில் நடைபெறுகின்றது.

இம் மணவிழாவை திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு அவர்கள் தலைமை ஏற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.

மணவிழாவிற்கு வருகை தருவோரை கே.ராஜா, திருமதி லலிதா ராஜா ஆகியோர் வரவேற்கின்றனர்.

**மணவிழா வரவேற்பு!**

அதனைத் தொடர்ந்து இன்று (24.1.2025 வெள்ளிக்கிழமை) மாலை 6.30 மணிக்கு மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி நுங்கம்பாக்கம் பாம்குரோவ் ஓட்டலில் (அண்ணா மேம்பாலம் அருகில்) நடைபெறுகின்றது.

மணவிழா மற்றும் மணவிழா வரவேற்பில் கழக முன்னணியினர், கழகத் தோழர்கள், ஆன்றோர் - சான்றோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நெல்லை மாவட்டத்திற்கு பிப்ரவரி மாதம் 6 மற்றும் 7 ஆகிய தேதிகளில் வருகை தந்து புதிய திட்டப் பணிகளை துவக்கி வைத்தும், முடிவுற்ற திட்ட பணிகளை துவக்கி வைத்தும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி பாளையங்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகிறது. அதனை முன்னிட்டு விழா முன்னேற்பாடு பணிகள் குறித்து நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு 21ஆம் தேதி நேரில் ஆய்வு மேற்கொண்டார். உடன் நகராட்சி நிர்வாக இயக்குனர் சிவராசு, மாவட்ட ஆட்சியர் மரு.கா.ப. கார்த்திகேயன்,நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன்கான், மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. மேயர் ராமகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர் சுகபுத்ரா, மாநகர காவல் ஆணையர் சந்தோஷ் ஹதிமீனா, துணை மேயர் ராஜ்,முன்னாள் எம்பி ஞானதிரவியம்,மாநகர செயலாளர் சு. சுப்பிரமணியன் மாவட்ட அவைத்தலைவர் கிரகாம்பெல் உள்பட அரசு அலுவலர்கள்,கழகத்தினர் பலர் உள்ளனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 5–இல், நான்கு சட்டமன்றத் தொகுதிகளில் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 26.01.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | 5 | காங்கேயம் | கோகுல் திருமண மண்டபம், தாராபுரம். |
| | | | தாராபுரம் | |
| | மாலை 3.00 மணி | | மடத்துக்குளம் | ராசி திருமண மண்டபம், போடிப்பட்டி, உடுமலைப்பேட்டை. |
| | | | உடுமலைப்பேட்டை | |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 22-01-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி